# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:149:2016 நாள்: 27.06.2016

அன்பார்ந்த தோழர்களே,

## உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விக்கான ஊக்கத்தொகை

நமது சங்கம் கடந்த பல ஆண்டுகளாக, பல்வேறு உறுப்பினர் நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. அவற்றின் ஒருபகுதியாக, உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விக்கு ஊக்கத்தொகை வழங்கிவருகிறது.

நமது சங்க செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், 10ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் எழுத்தர்களின் குழந்தை ஒன்றுக்கும், துணைநிலை ஊழியர்களின் குழந்தை ஒன்றுக்கு ரூ.3,000/- ஊக்கத்தொகை வழங்கப்படும். அதேபோன்று, +2 வகுப்பில் முதலிடம் பெறும் எழுத்தர்களின் குழந்தை ஒன்றுக்கும், துணைநிலை ஊழியர்களின் குழந்தை ஒன்றுக்கும் ரூ.3,000/- ஊக்கத்தொகை வழங்கப்படும். மொத்தமாக 4 குழந்தைகளுக்கு ரூ.12,000/- வழங்கப்படவுள்ளது. பங்குபெறும் அனைத்து குழந்தைகளுக்கும் பயனுள்ள ஒரு புத்தகம் ஆறுதல் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

கடந்த கல்வி ஆண்டில் (2015-2016) 10ஆம் வகுப்பு மற்றும் +2 வகுப்பில் தேர்வு பெற்ற குழந்தைகளின் பெற்றோர்கள், அவர்களது மதிப்பெண்கள் பட்டியலையும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தையும் பூர்த்திசெய்து 16.07.2016க்கு முன்னதாக சங்க அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

**கோபாலபுரம் கிளையைச் சார்ந்த தோழர்.கணேசன் அவர்களது மகனின் மருத்துவ செலவுக்கு பங்களிப்பு வேண்டி, சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை பணம் செலுத்தாத தோழர்கள், தங்களது பங்களிப்பை கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் :**

**சங்கக் கணக்கு எண்: 33260 20700 23694**